| | |
|---|---|
| | பத்திரிக்கை வெளியீடு<br>Reserve Bank of India |
| தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001 | இந்திய ரிசர்வ் வங்கி<br>வெப்சைட் Website: www.rbi.org.in |
| DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001<br>போன் Phone: 91 22 2266 0502 | இ மெயில் Email: helpdoc@rbi.org.in |

ஆகஸ்ட் 1, 2020

**சிவம் சஹகாரி பாங்க் லிமிடெட், இச்சல்கரஞ்சி, மாவட்டம் - கோலாப்பூர், மகாராஷ்டிரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல் உத்திரவுகள்**

சிவம் சஹாகரி பாங்க் லிமிடெட், இச்சல்கரஞ்சி, மாவட்டம், கோலாப்பூர், மகாராஷ்டிரா மே 18, 2018 தேதியிட்ட DCBS.CO.BSD-I/D-6/12.22.351/2017-18 உத்தரவின்படி, மே 19, 2018 அன்று வர்த்தகம் முடிவடைந்ததிலிருந்து வழிகாட்டுதல் உத்திரவின் கீழ் வைக்கப்பட்டது

2. இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 35 A இன் துணைப்பிரிவு (1) உடன் இணைந்த பிரிவு 56 இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கண்ட வங்கிக்கு வழங்கிய மே 18, 2018 தேதியிட்ட DCBS.CO.BSD-I/D-6/12.22.351/2017-18 உத்தரவின் செல்லுபடி காலத்தை அவ்வபோது மாற்றியமைத்து, கடைசியாக ஜுலை 31, 2020 வரை நீட்டித்திருந்த நிலையில், தற்போது ஜுலை 24, 2020 தேதியிட்ட DOR.CO.AID/D5/12.22.351/2020-21 உத்தரவின்படி மதிப்பாய்வுக்கு உட்பட்டு ஆகஸ்ட் 01, 2020 முதல் அக்டோபர் 31, 2021 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நீட்டிக்கிறது என்பதைப் பொது மக்களின் தகவலுக்காக அறிவிக்கிறது.

3. பார்வையில் கண்ட உத்தரவின் மற்ற நிபந்தனைகள் மாறாது இருக்கும். ஜுலை 24, 2020 தேதியிட்ட DOR.CO.AID/D5/12.22.351/2020-21 கால நீட்டிப்பை அறிவிக்கும் உத்தரவின் நகல், வங்கியின் வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

4. இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்கூறிய கால நீட்டிப்பு மற்றும் / அல்லது திருத்தங்களால் வங்கியின் நிதி நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி திருப்தி அடைந்துள்ளதைக் குறிக்காது.

**யோகேஷ் தயாள்**
தலைமை பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2020-2021/130**